அறத்தான் வருவதே இன்பம்

# தமிழ் அறம்



உள்ளே...

ஆசிரியர் தலையங்கம் .................................. 1

நெஞ்சமே அஞ்சாதே நீ!

பிரச்சனை.............................................................2

சிலப்பதிகாரம்.....................................................3

மக்கள் சக்தி இயக்கம் .................................... 5

கவிதைகள். ......................................................... 6

சிந்தனை 7 செயல் 12 ஆசிரியர் மரு.த.இராசலிங்கம் நவம்பர் 2025

**பண்புள்ள தமிழ்நெஞ்சங்களுக்கு வணக்கம்!**

## வருமுன்னர்க் காத்திடுக!

முன்பெல்லாம் மழைக்காலம் என்றாலே நெஞ்சம் குளிரும். தொடர்ந்து மூன்று மாதம் மழை பொழிந்தாலும் புயல், சூறைக்காற்று வீசினாலொழிய இயல்பு வாழ்க்கைக்குப் பெரிதாகப் பாதிப்பு இருப்பதில்லை. ஆங்காங்கே மண்வீடுகள் இடிந்து விழுவதுண்டு. பாதிக்கப்பட்டப் பகுதிகளை வட்டாட்சியர் பார்வையிட்டு உடனே இழப்பீடு வழங்க ஆவன செய்வார்

ஆனால், இப்பொழுது மழை வருகிறது என்றாலே, அச்சமாக உள்ளது. மழைநீர் வடிகால் முறையாக வேலை செய்வதில்லை. சாலைகளில் தண்ணீர் பல நாள்கள் தேங்கிக் கிடக்கிறது. எப்பொழுது வெள்ளம் வருமோ என்று அஞ்சியே வாழ வேண்டியுள்ளது.

இதற்கெல்லாம் காரணங்கள் என்ன ?

அரசியல் விருப்பு வெறுப்பின்றி நாம் அனைவரும் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். எங்கே தவறு நடைபெறுகிறது என்பதை உணர்ந்து, அவற்றைத் திருத்திக் கொள்ள மக்களும், அரசாங்கமும் முன்வரவில்லை என்றால், இழப்பு என்பது வருங்காலத்தில் கட்டுப்படுத்த முடியாத அளவுக்குச் சென்றுவிடும்.

பொருளாதாரத்தில் நாம் பின்தங்கியிருந்த காலத்தில், அரசின் வருவாய் குறைவாக இருந்த காலத்தில், செய்ய வேண்டிய மராமத்துப் பணிகள் சீராக நடைபெற்றன.

ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள குட்டை, குளம், கண்மாய், நீர்வழிச்சாலைகள் குறிப்பிட்டக் கால இடைவெளியில் தூர்வாரி பராமரிக்கப்பட்டன. அதனால் நீர்நிலைகளின் கொள்ளளவு என்றும் குறையாமல் இருந்து வந்தது.

கிராம மக்களும் நீர்நிலைகளைப் போற்றிப் பாதுகாத்து வந்தனர். மழையளவு குறைந்து நீர் நிலைகள் வறண்டுவிட்டால் அதற்காகப் பெரிதும் வருந்தினார்கள்.

ஆனால் இன்று மக்களும் நீர்நிலைகள் குறித்து அக்கறை கொள்வதில்லை. பல ஊர்களில் வீட்டுக் கழிவுகளையும், குப்பைகளையும் அங்கே கொட்டுகிறார்கள்.

அரசு நிருவாகம் பற்றி சொல்ல வேண்டியதில்லை. மராமத்துப் பணிகள் மறந்து பல ஆண்டுகளாகிவிட்டன. அப்படியே பணிகள் நடந்தாலும், பெயரளவுக்கு நடக்கின்றன. இருக்கின்ற நீர்நிலைகளையெல்லாம் குறைந்தது ஓரடி தூர்வாரி கரைகளைப் பலப்படுத்தினாலே கொள்ளளவை அதிகப்படுத்தி, வெள்ளம் பெருக்கெடுப்பதை தடுக்க முடியும். கண்மாய், குளம் உடைந்து வெள்ளம் ஏற்படுவதால் மக்கள் அடைகின்ற துன்பம் பாதிக்கப்பட்டவர்களுக்குதான் தெரியும்.

நகர்ப்புறப் பகுதிகளில், மழைநீர் வடிகால் சரியான திட்டமிடல் இல்லாமல், பொறியியல் முறைப்படி கட்டாததால், சாலைகளில் மழைநீர் தேங்கி, போக்குவரத்துக்கு இடையூறாகவே உள்ளது. மேலும் மழைநீர் வழித்தட ஆக்கிரமிப்புகளாலும், மழைநீர் குடியிருப்பு பகுதிகளில் தேங்கிவிடுகிறது.

வருமுன்னர்க் காப்பது ஒன்றுதான் வெள்ளப் பாதிப்புகளிலிருந்து மக்களைக் காக்க முடியும். பொதுநல அமைப்புகள் சில, ஆக்கப்பூர்வமானச் செயல்களை முன்னெடுத்தாலும், அரசாங்கம் செய்ய வேண்டியப் பணிகளை - நீர்நிலைகள் பராமரிப்பு, திறன்மிக்க வடிகால், ஆக்கிரமிப்பு அகற்றம் போன்றவற்றை முனைப்புடன், உறுதியான முறையில் செய்தால்தான் நிரந்தரமான நன்மை உண்டாகும். நமக்கு மழை மகிழ்ச்சியைப் பொழியும்!



எனவே, மழைவெள்ளம் -- பாதிப்பு என்றால்.....

குற்றம் மழைமீது இல்லை!

வருமுன்னர்க் காக்கத் தவறும் நாம்தான் குற்றவாளி!

அன்புடன். ஆசிரியர்

## நெஞ்சமே அஞ்சாதே நீ!

டாக்டர். எம்.எஸ்.உதயமூர்த்தி

கவலைப்படுவதை அன்பு செலுத்துவதற்குச் சமமாகப் பலர் நினைக்கிறார்கள். “நீ வரவில்லையே எனக் கவலைப்பட்டேன்”, “நீ தேர்வில் வெற்றி பெறுவாயோ எனக் கவலைப்பட்டேன்”. :உன்னிடமிருந்து கடிதம் வரவில்லையே எனக் கவலைப்பட்டேன்” என்று பலவாறாக் கவலைப்படுகிறோம். நாம் கவலைப்படுவது, நாம் அன்பு செலுத்தும் நபருக்கு எவ்வித வலுவையும், நம்பிக்கையையும் தருவதில்லை. ஆக, இது பயன் தராத செயல். நாம் அன்பு செலுத்துவதைக் காட்டிக்கொள்ள எத்தனையோ வழிகள் இருக்கின்றன.

“உங்களுக்கு இது பிடிக்கும் என்று சமைத்தேன்” எனலாம்.

“உனக்கு இது அழகாக இருக்கும் என வாங்கி வந்தேன்” எனலாம்

“நான் ஏதாவது உதவ முடியுமா என்று சொல்லுங்கள்” எனக் கேட்கலாம்.

கவலைப்படுவதன் மூலம் ஒரு கடுகளவும் எதையும் மாற்ற முடியாது

நமது கட்டுப்பாட்டுக்குள் உள்ள விடயங்கள் பற்றி நமது கவலை என்றால் அதற்கான தீர்வைக் காண முயலவேண்டும். நமது கட்டுப்பாட்டுக்குள் இல்லாத விடயங்களைப் பற்றிக் கவலைப்படுவது அறியாமை ஆகும். மழை வராமல் பயிர் கருகி போகுமோ என, புயல் வருமோ என, வெள்ளம் வந்தால், தீப்பிடித்தால் என்ன செய்வது எனப் பலவிதத்திலும் சில சமயம் கவலை ஏற்படுகிறது. இவை எல்லாம் நம் கைக்கு அப்பாற்பட்ட கவலைகள். இதுபற்றி நாம் எதுவும் செய்ய முடியாது. கவலைப்பட்டுப் பயனில்லை.



மனம் எதை நினைக்கிறதோ அதை நிறைவேற்றுகிறது. ஆகவே, நாம் நடக்க வேண்டிய நல்ல காரியங்களை மனதில் ஊறப்போடுவோம்!

## பிரச்சனை...

முனைவர்.லெ.பாஸ்கர்

நம் எல்லா பிரச்சனைகளும் நமக்குச் சொல்வது ஒன்றே ஒன்றுதான். அது - உன்னை நீயே திருத்தி மேம்படுத்திக் கொள் என்பதுதான். இது இப்படித்தான், அது அப்படித்தான் என்று ஒரு வரைமுறையை வைத்துக் கொண்டும், வகுத்துக் கொண்டும் அப்படியே வாழ நாம் வரவில்லை. நாமும் கற்று, நம்மைப் மேம்படுத்தி, நமது எல்லைகளை விரிவுபடுத்தி, நம் அணுகுமுறைகளை மாற்றி, நம் தவறுகளை நாமே உணர்ந்து, நம்மை நாமே மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதே நம் வாழ்வில் சந்திக்கும் பிரச்சனைகளுக்குத் தீர்வாக இருக்க முடியும்.

நம் பிரச்சனைகளுக்கான காரணங்களை ஆராய வேண்டும். காரண காரியங்களுக்கு ஏற்ப நம் முடிவு அமைய வேண்டும். தீர்வை எட்டுவதற்கான காலம் வரும்வரை அமைதி காக்க வேண்டும். நிரந்தர தீர்வை நோக்கியே நம் நகர்வு இருக்க வேண்டும். பிரச்சனைகளை எதிர் கொள்ளாமல் ஒத்திப்போடுவது தற்காலிகத் தீர்வாக அமையலாம். தற்காலிகத் தீர்வில் நம் மனம் தேங்கிவிடுவது என்றைக்கும் நல்லதல்ல. சொந்த வாழ்விலும் சரி, பொதுவாழ்விலும் சரி ஒருவன் பிரச்சனைகளைக் கண்டு அஞ்சாமல் நிரந்தர தீர்வுக்காக முயல வேண்டும். குறை நம்மிடம் என்றால் திருத்திக்கொள்ள வேண்டுமேயொழிய, பிறர் மீது குற்றம் சுமத்தக் கூடாது.

பொதுவான மனித இயல்பு - பிரச்சனைகளுக்கான சூழ்நிலையை அதன் வேர்வரை சென்றுப் பார்க்காமல், மேலோட்டமாகப் பார்த்துவிட்டு ஒரு முடிவுக்கு வந்துவிடுவதுதான். அதனால் சின்னஞ்சிறியப் பிரச்சனைகள் கூட பெரிதாக, தீர்க்க முடியாமல் போய்விடுவதுண்டு.

எனவே, பிரச்சனைகளுக்கான நிரந்தர தீர்வு என்பது, அதை நாம் எந்த விதத்தில் கையாளுகிறோம் என்பதைப் பொறுத்தே அமையும் என்பதை அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.



# மழை

மழையே மழையே வா வா !
மண்ணின் மணியே வா வா !

கானின் மரங்கள் குளித்திட
காயும் வெப்பம் தணித்திட
வானப் புனலே சிந்திடு !
வையம் செழிக்க வந்திடு !

உழைக்கும் உலகம் களித்திட
உழவன் கைகள் தொழுதிட
மேழிச் செல்வம் ஈந்திடு !
மேன்மை கொழிக்கத் தந்திடு !

தாழும் கருணை தாங்கிட
தானம் தவமும் தங்கிட
வீழும் பயிர்கள் காத்திடு !
வாழும் உயிர்கள் வைத்திடு !

மதுரகன் இன்னிசை விளங்கிட
மதுரைத் தமிழாய் முழங்கிட
பாவாய் நெஞ்சில் மொழிந்திடு !
பாலாய் தேனாய் பொழிந்திடு !

வெள்ளம் என்று பாய்ந்திட
விளைந்த பயிர்கள் சாய்ந்திட
பெருகும் பஞ்சம்; உணர்ந்திடு !
பெய்யும் அளவும் அறிந்திடு !

மரு. த. இராசலிங்கம்

# மழை வெள்ளம்

துள்ளும் இளமைத் துடிப்போடு
துரத்தி நீயும் வருகின்றாய் !
வெல்லும் தகுதி எமக்கில்லை
வெட்ட வெளியை விற்றுவிட்டோம்.

பள்ளம் நோக்கிப் பாய்ந்திடுதல்
பாரில் உனது இயல்பன்றோ !
செல்லும் உன்வழி அடைத்துவிட்டால்
சீற்றம் நீயும் கொள்ளாயோ !

பொல்லா மனிதர் போக்காலே
போகும் வழியும் இழந்தாயே !
எல்லா இடமும் வீடாக,
எங்கே செல்வாய் ? எம்மழையே !

வெள்ளம் என்னும் பெயராலே
இல்லான் வீட்டில் நுழையாதே !
கொள்ளும் அளவை மீறியே
குளத்தை நீயும் நிரப்பாதே !

கொல்லும் துன்பம் பொடுத்தாலும்
கொட்டும் மழையே ஆனாலும்
நெல்லும் நீரும் உணவாக
நீயே உயிரைக் காத்திடுவாய் !

சொல்லும் வெற்றுப் பேச்செல்லாம்
சொறியும் கொள்ளிக் கட்டைகளே !
உள்ளம் அறமே நின்றிடுக !
ஊரும் மழையைப் போற்றிடுமே !

மரு. த. இராசலிங்கம்

**தமிழ் அறம் மின்னிதழ்**
**வெளியிடுபவர் : மருத்துவர்.த.இராசலிங்கம். MBBS.,Dip.Diab**
**4/16, இராம் நகர். தூத்துக்குடி.**

# சங்க இலக்கியத்தில் உவமையழகு
# கலித்தொகை -- மருதக்கலி

பொய்கையின் கரையானது உடைத்துக் கொள்ள அப்பொய்கையின் வயல்களில் இருந்த தாமரை மலர்கள் சாய்ந்து விடுகின்றன. அந்தத் தாமரை மலர்களில் தேனுண்டு கொண்டிருந்த தும்பியானது, வருத்தமுற்று வேறோர் பொய்கையைத் தேடியலையும் போது, வயல்களில் பெருகியிருந்த வெள்ளமும் வடிந்துவிட, அந்தத் தும்பியானது மீண்டும் அந்த வயல்களுக்கே வந்து அங்கிருந்த தாமரை மலர்களில் தேனை உண்டு மகிழ்ந்ததாம். இந்தக் காட்சியை நாட்டு நடப்போடு உவமைப்படுத்துகிறார் இளநாகனார்.

அதாவது, தங்கள் நாட்டைப் பகை மன்னன் கைப்பற்றிவிட, மக்களெல்லாம் நாட்டைவிட்டு வெளியேறி, தங்களைப் பாதுகாக்கும் பண்புடைய மற்றொரு மன்னனின் நாட்டிலே குடியேறி, பின்னாளில், பகைமன்னன், நாட்டைவிட்டுச் சென்றுவிட, மீண்டும் தங்கள் சொந்த ஊருக்கே மகிழ்ச்சியோடு திரும்புகின்ற காட்சியோடு தொடர்புபடுத்துகிறார்.

**பல் மலர்ப் பழனத்த பாசடைத் தாமரை**
**இன் மலர் இமிர்பு ஊதும் துணை புணர் இருந் தும்பி**
**உண்துறை உடைந்த பூப் புனல் சாய்ப்ப, புலர்ந்து, ஊடி**
**பண்புடை நல் நாட்டுப் பகை தலை வந்தென,**
**அது கைவிட்டு அகன்று ஒரீஇ, காக்கிற்பான் குடை நீழற்**
**பதி படர்ந்து, இறைகொள்ளும் குடி போல.......**

ஆடலரங்கில் நடனமங்கை ஒருத்தி ஆடுகின்றாள். அவள் தன் அழகிய நெற்றியிலே "வயந்தகம்" என்னும் அணிகலனை அணிந்திருக்கிறாள். அது காண்பதற்கு எப்படி இருந்தது தெரியுமா ?.புள்ளினங்கள் இசைபாடும் வயல்களிலே நெற்பயிர் கதிர் முற்றி, தலைசாய்க்கும் பருவம். அப்பயிரிடையே வளர்ந்திருக்கும் தாமரை மலரின் இதழ்மீது நெற்கதிர் ஒன்று படர்ந்து கிடப்பது போல் இருந்தது என்று பாடுகிறார் புலவர்.

**புள் இமிழ் அகல் வயல் ஒலி செந்நெல் இடைப் பூத்த**
**முள் அரைத் தாமரை முழு முதல் சாய்த்து, அதன்**
**வள் இதழ் உற நீடி, வயங்கிய ஒரு கதிர்,**
**அவை புகழ் அரங்கின்மேல் ஆடுவாள் அணி நுதல்**
**வகைபெறச் செரீஇய வயந்தகம் போல், தோன்றும்**

காணுகின்ற ஒரு காட்சியோடு இன்னொரு காட்சியைத் தொடர்புபடுத்தி நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்வதுதான் உவமையழகு!. அஃது இலக்கியத்தின் தனியழகு!

**.......உவமையழகு தொடரும்.**

**மரு.த.இராசலிங்கம்.**







## தஞ்சை மாவட்ட மக்கள் சக்தி இயக்கம் பனங்கொட்டை ஊன்றும் நிகழ்வு

தஞ்சை மாவட்ட மக்கள் சக்தி இயக்கம் சார்பாக ஒரு இலட்சத்துக்கும் மேல் பனங்கொட்டை விதைக்கப்பட்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக 9.11.25 அன்று பூதலூர் கோவில்பத்து ஊராட்சியில் மாநிலப் பொதுச்செயலாளர் முனைவர்.லெ.பாஸ்கர் தலைமையில், மாநில ஆலோசகர் திரு.ஜெயக்குமார், மாவட்டச் செயலாளர் பேரா.முருகானந்தம் முன்னிலையில் பனங்கொட்டைகள் ஊன்றப்பட்டன. குருசாமி.திரு.தங்கமணி அவர்களுக்கு சமூகசேவைக்கான விருது வழங்கப்பட்டது. நிகழ்வில் மாவட்டப் பொருளாளர்.திரு.செந்தில்குமார், ஆசிரியர் சீனிவாசன், பண்பாளர்கள் ஷேக்அப்துல்லா, ஆதிகேசவன், புண்ணியமூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை பூதலூர் திரு.பாலதண்டாயுதபாணி சிறப்பாக செய்திருந்தார்.



**திருச்சி மாவட்ட மக்கள் சக்தி இயக்கம் – உடல் உறுப்பு தானம் செய்த குடும்பத்தினருக்கு பாராட்டு** - புதுக்கோட்டை காமராஜபுரத்தில் 5.11.25 அன்று மூளைச்சாவு அடைந்த ஜோதி தொல்காப்பியன் என்பவரின் உடல் உறுப்புகளைக் கொடையாக வழங்கிய அவரது கணவர் தொல்காப்பியன், மகன்கள் கோவிந்தராஜ், முத்துக்குமார் ஆகியோரை மக்கள் சக்தி இயக்க மாநிலப் பொருளாளர் கே.சி.நீலமேகம், மாநில ஆலோசகர் வெ.இரா. சந்திரசேகர், மாநில துணைச் செயலாளர் இரா.இளங்கோ, புதுக்கோட்டை மாவட்டச் செயலாளர். முனைவர் கணேசன், திரு.அசோகன், திரு.முருகேசன் ஆகியோர் 18.11.25 அன்று நேரில் சந்தித்து ஆறுதலையும், பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

## இனியவை கூறுவோம்!

சொற்களில்
தேன்என
சொந்தமே
கொண்டிடும்!

கற்றவர்
நன்றென
கார்முகில்
வில்லென....

கற்களை
முட்களை
காலத்தே
நீக்கியே!

உற்றவர்
ஆகியே
ஓது
பேதமேது ?

வறுமை
துன்பம்
வருவது
இல்லையே!

இன்சொல்
சுவையில்
இனிப்புடன்
பேசினால்!

கவிஞர். கலியுகன் கோபி. சென்னை

## மரம்

மண்ணில்ஓர் விதையெனவே
வீழ்ந்தவன்தான் மரமானான்
தண்ணீரே உணவாக்கி
தரணிதனைக் காக்கின்றான்.

பறவைகளும் கூடுகட்ட
பாகுபாடு காட்டாது
உறவெனவே ஓம்பியதன்
உயிர்களையே காக்கின்றான்

வெட்டுகின்ற மனிதனுக்கும்
வெயிலகற்ற நிழல்தந்து
பட்டுதன்கை ஒடிந்திடினும்
பயன்படுநல் விறகாவான்

உயிர்வளியும் அவன்அளித்தே
உலகத்தைக் காக்கின்றான்
அயர்வின்றி உறங்கிடவே
அரவணைப்பும் தருகின்றான்

பசுமையான காடுகளால்
பாரில்தான் மழைபொழியும்
விசும்பின்நீர் கொடையும்தான்
வியன்மரங்கள் கருணையாலே!

மரத்தின்மா குணங்களையே
மறந்திடவோ மானிடரே!
கரங்களையே கோப்பீரே!
காத்திடுவீர் மரங்களையே!

(ஆசிரியரின் திருத்தங்களுடன் )

கவிஞர்.ஆசிரியர் க.தேவிகா
தூத்துக்குடி